www.agaram.lk

FWC

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்

இரண்டாம் தவணைப் பரீட்சை - 2021

# Conducted by Field Work Centre, Thondaimanaru.

# 2nd Term Examination – 2021

அரசியல் விஞ்ஞானம்

**Political Science**

Three Hours

Gr -12 (2022)

23 | T | I, II

## பகுதி I

❖ **1 தொடக்கம் 10 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் வினாவின் தலைப்புடன் தொடர்பான ஐந்து கூற்றுக்களைக் கொண்டுள்ளன. அவற்றுள் நான்கு கூற்றுக்கள் மாத்திரம் சரியானவையாகும். சரியான கூற்றுக்களின் தொகுதியைத் தெரிவு செய்க.**

01. அரசியல் செய்தல் என்பது

A. போராட்டம் மற்றும் எதிர்ப்பு இயக்கங்கள் போன்றவற்றில் பங்குபற்றல்

B. அரசியல் கட்சிகளின் செயற்பாட்டில் பங்குபற்றல்

C. தேர்தல்களில் பங்குபற்றாமை

D. அரசாங்க அதிகாரத்தை பெற்றுக் கொள்ள செயற்படல்

E. அரசாங்க அதிகாரத்தை பெற்றுக் கொள்ள செயற்படல்

F. அரசாங்க அதிகாரத்தை நடைமுறைப்படுத்தல்

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE ( )

02. அ0ர0சாட்சி செயற்பாட்டில் உள்ளடக்கப்படும் பணிகள்

A. நாடுகளிடையிலான தொடர்புகளை முகாமை செய்தல்

B. சமூக குழுக்களிடையிலும் மற்றும் அரசசமூககுழுக்களிடையில் ஏற்படும் முரண்பாடுகளை முகாமை செய்தல்.

C. சமூக பொருளாதார அபிவிருத்தி மற்றும் நிலைமாற்றத்தினைக் கொண்ட நோக்கமாககொண்ட கொள்கைகளை உருவாக்குதல்.

D. மரபுகள் வழக்காறுகளைக் கொண்ட சமூக கட்டமைப்பினைப் பேணுதல்.

E. சமூகத்தின் நல்வாழ்வுகளை சட்டங்களை உருவாக்குதலும் அவற்றினை நடை முறைப்படுத்தலும்

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE ( )

03. அரசு மற்றும் அரசாங்க நிறுவனங்கள்

A. ஒன்றுக்கொன்று தொடர்படாத வேறுபட்ட நிறுவனம் ஆகும்.

B. அரசாட்சி முறையில் இவ் இரண்டு நிறுவனங்களுக்கு இடையில் வேறுபாடு இருக்கவில்லை.

C. லிபரல் ஜனநாயக அரசியல் முறையின் தோற்றத்துடன் இரண்டிற்கும் இடையில் வேறுபாடுகள் முன்வைக்கப்பட்டன.

D. அரசாங்கம் அரசின் அதிகாரங்களை நடைமுறைப்படுத்தும் பிரதான முகவர் நிறுவனமாக செயற்படுகின்றது.

E. அரசாங்கம் பற்றிய கலந்துரையாடல்கள் ஆரம்பகால அரசியல் சிந்தனையில் காணப்படவில்லை.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE ( )



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

04. அரசியல் கட்சியினை ஏனைய அரசியல் குழு மற்றும் சமூக இயக்கங்களிலிருந்து வேறுபடுத்தும் பண்புகள்

A. கொள்கை ரீதியிலான கருத்தியல் அடையாளங்கள் காணப்படல்

B. அங்கத்துவ அட்டைகளை கொண்ட ஒழுங்கமைக்கப்பட்ட பிரிவாகும்.

C. அரசாங்க கொள்கைக்கு மாறான விடயங்களில் அவதானம் செலுத்தும்

D. அரசியல் அதிகாரத்தினை பெற்றுக் கொள்வதினை பிரதான நோக்கமாக கொண்டிருக்கும்.

E. அரசாங்க அதிகாரத்தினை நடைமுறைப்படுத்தும் முயற்சியை மேற்கொள்கிறது.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE ( )

05. அரசியல் தத்துவம் என்பது

A. அரசியல் விபரிப்பில் பயன்படுத்தப்படும் எண்ணக்கருக்களின் வரைவிலக்கணங்களை தெளிவுபடுத்துகின்றது.

B. அரசியலில் காணப்படும் அடிப்படை பிரச்சனைகளை ஆய்வு செய்கின்றது.

C. அரசியல் லட்சியகோட்பாடுகள் முன்மொழிகின்றது.

D. 20ம் நூற்றாண்டின் பிற்பகுதியில் பின்னடைவை எதிர்நோக்கியது.

E. 1970களில் மீண்டும் முக்கியத்துவம் பெற்றுவருகின்றது.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE ( )

06. அரசியல் கருத்தியல் என்பது

A. அரசியலின் தீர்மானிக்கும் சக்தியினை கொண்டு அமையவில்லை.

B. சமூகத்தின் அரசியலுக்கு அழுத்தம் கொடுப்பதுடன் அதன் செயற்பாட்டிற்கும் போக்கிற்கும் வழிகாட்டுகின்றது.

C. ஒவ்வொரு கருத்தியலும் வேறுபட்ட கருத்து தொகுதிகளாக உருவாக்கப்பட்டுள்ளது.

D. சமூக பிரிவுகளை அரசியல் செயற்பர்டுகளில் ஈடுபடுத்துவதற்கான வாய்ப்பினைக் கொண்டுள்ளது.

E. அரசியல் நிறுவனங்கள் மற்றும் அரசியல் பரிமாற்றத்தில் பாதையினை ஒழுங்கமைக்கும் சாதனமாக விளங்குகிறது.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE ( )

07. நவீன ஆள்புல அரசொன்றின் பண்புகள்

A. இறைமை

B. தேசிய அடிப்படை

C. மக்கள் தொகை

D. அரசாங்கம்

E. வரையறுக்கப்பட்ட ஆட்புல பிரதேசம்

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE ( )

08. தாராள(லிப்ரல்) ஜனநாயக அரசு முறை

A. வரையறுக்கப்பட்ட அரசு என்ற அடிப்படை எண்ணக்கருவின் அடிப்படையில் தோற்றம் பெற்றதாகும்

B. முதலாளித்துவ பொருளாதார அரசியல் முறையினை அடிப்படையாக கொண்டுள்ளது.

C. பிரித்தானிய மற்றும் ஐரோப்பிய அரசுகளில் மட்டும் காணப்படுகின்றது.

D. பிரதிநிதித்துவ ஜனநாயக அரசாங்கமுறையில் இவ் அரசு அமைந்துள்ளது.

E. மறுமலர்ச்சி மற்றும் கைத்தொழில் புரட்சியுடன் இவ் அரசுமுறை தோற்றம் பெற்றது.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE ( )



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk
agaram.lk

09. சமவுடமைவாத அரசுமுறை

A. மாக்சிசவாத கருத்தியலின் அடிப்படையில் தோற்றம் பெற்றதாகும்.

B. சமூகத்தில் சமத்துவம் நிலைபெற்றபின்பும் அரசு நிலைத்திருக்கும்

C. 20ம் நூற்றாண்டில் அபிவிருத்தி அடைந்த அரசு முறையாகும்.

D. பிரஜைகளின் வாழ்க்கைத் தரத்தினை அபிவிருத்தி செய்வதில் கரிசனை கொள்கிறது.

E. தனியாள் முயற்சிக்கு பதில் அரசாதிபத்தியம் நிலைநிறுத்தப்படும் முறைமையாகும்.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE ( )

10. பாசிசவாத அரச முறை

A. 20ம் நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் தோற்றம் பெற்ற அரசு முறையாகும்.

B. இனத்தின் சிருஷ்டியே அரசு எனக் குறிப்பிடப்படுகின்றது.

C. சர்வவல்லமை பொருந்திய ஸ்தாபனமே அரசு எனக் குறிப்பிடப்படுகின்றது.

D. அரசின் படைப்பே ஆட்சியாளன் ஆவான்

E. நாயகர் வழிபாட்டினையும் ஜனநாயக மறுப்புவாதத்தினையும் கொண்ட ஆட்சி முறையாகும்.

1. ABCD 2. BCDE 3. ABDE 4. ACDE 5. ABCE ( )

❖ **11 – 20 வரையான வினாக்களில் பொருத்தமற்ற கூற்றினைத் தெரிவு செய்க.**

11. பாராளுமன்ற அரசாங்க முறையின் அடிப்படை மூலக்கொள்கைகளாவன

1. அரசாங்கம் பாராளுமன்றின் நம்பிக்கையில் தங்கியிருப்பதனால் பாராளுமன்றங்களுக்குப் பொறுப்புக் கூறும் அரசாங்கமாக இருத்தல்
2. நிறைவேற்றுத்துறை கூட்டுத்தன்மையுடையதாக இருத்தல்.
3. அரசாங்கத்தின் தலைவரான பிரதம மந்திரி அரசின் தலைவர் மற்றும் ஆயுதப்படைகளின் தளபதி ஆகிய பதவிகளை வகித்தல்.
4. பொதுவாகப் பாராளுமன்றில் பெரும்பான்மை ஆசனங்களைப் பெற்ற கட்சியின் உறுப்பினர்களிலிருந்து நிறைவேற்றுத்துறை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்படுதல்.
5. தேர்தலின் நிர்ணயிக்கப்படும் பாராளுமன்றத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அரசியல் கட்சிகளின் பலத்தின் அடிப்படையில் அமைக்கப்படுதல் ( )

12. ஜனாதிபதி அரசாங்க முறையின் அடிப்படை மூலக்கொள்கைகளாவன

1. அரசு மற்றும் அரசாங்கத்தின் தலைவர் என்ற இரு பதவிகளும் ஜனாதிபதிப் பதவியில் ஒன்று குவிக்கப்பட்டிருத்தல்.
2. ஒரு நம்பிக்கையில்லாப் பிரேரணையை நிறைவேற்றுவதன் மூலம் ஜனாதிபதியைப் பதவி நீக்கம் செய்வதற்குச் சட்டத்துறை திறன் பெற்றிருத்தல்.
3. நிறைவேற்றுத்துறையும் சட்டத்துறையும் இரு வேறுபட்ட தேர்தல்களின் மூலம் தெரிவு செய்யப்படுதல்.
4. யாப்பின் மூலம் நிறைவேற்றுத்துறை மற்றும் சட்டத்துறைகளுக்கு ஒன்றிலிருந்து இன்னொன்று சுயாதீனமான இரு அதிகாரப் பரப்புக்கள் ஒப்படைக்கப்படல்
5. யாப்பின் மூலம் நிறைவேற்று ஆணையதிகாரம் ஜனாதிபதியிடம் குவிந்திருத்தல் ( )



Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

13. சமதர்மம் என்பது
    1. சமமான குடியுரிமை, சமமான சந்தர்ப்பங்கள் என்ற மூலக்கொள்கையின் அடிப்படையிலமைந்த சமூக முறைமையொன்றாகும்.
    2. உற்பத்திக் கருவிகள் மற்றும் பங்கீட்டின் மீது அரசின் உடமை என்பதனை அடிப்படையாகக் கொண்ட ஒரு பொருளாதார முறைமையாகும்.
    3. தாராள ஜனநாயகத்துக்கு மாற்றீடாகவுள்ள ஓர் அரசியல் முறைமையாகும்.
    4. பல கட்சி முறையின் அடிப்படையில் செயற்படும் ஓர் ஆட்சி முறைமையாகும்.
    5. முதலாளித்துவத்தினால் உருவாக்கப்படும் சமூக அசமத்துவத்துக்குத் தீர்வு கா முயலும் ஓர் அரசியல் கருத்தியலாகும். ( )

14. சமூக ஜனநாயகம் என்பது
    1. சந்தை முதலாளித்துவத்துவத்திற்கும் புரட்சிகர சமதர்மத்துக்கும் மாற்றீடான ஒரு பொருளாதார மாதிரியாகும்.
    2. சந்தைப் பொருளாதாரத்துக்கும் சமூக நீதிக்குமிடையில் உடன்பாட்டை ஏற்படுத்துவதில் அக்கறை கொள்கிறது.
    3. புரட்சியினூடாக சமூக மாற்றம் என்ற கால்மாக்சின் கோட்பாட்டை ஏற்றுக்கொள்ளும் ஓர் அரசியல் கோட்பாடாகும்.
    4. சந்தைப் பொருளாதாரம், மலர்ச்சிச் சமதர்மம், நலன்புரி அரசு என்ற மூன்று தூண்களின் மீது தாபிக்கப்பட்டதாகும்
    5. ஜனநாயக வழிமுறைகளினூடாக சமதர்ம சமூகமொன்றைத் தாபிப்பதை இலக்காகக் கொண்டதாகும். ( )

15. அரைகுறை ஜனாதிபதி அரசாங்க முறைமையின் பிரதான பண்புகளாவன
    1. ஜனாதிபதி, பிரதம மந்திரியின் தலைமையிலான மந்திரி சபை என்ற இரட்டை நிறைவேற்றுத்துறையின் இருப்பு
    2. ஜனாதிபதி மக்களால் தெரிவு செய்யப்படுதலும் ஜனாதிபதியால் பிரதமரும் மந்திரி சபையும் நியமிக்கப்படுதலும்
    3. பிரதமர் மற்றும் மந்திரி சபை சட்டத்துறைக்கு நேரடியாகப் பொறுப்புக்கூறல்
    4. ஜனாதிபதிப் பதவி அரசின் நிறைவேற்று அதிகாரத்தைக் கையாளும் ஒரு நிறுவனமாதல்
    5. பிரதம மந்திரி அரசாங்கத்தின் தலைவர் என்ற நிலையை வகித்தல். ( )

16. குடியுரிமை என்பது
    1. ஒரு நாட்டில் வாழும் எல்லோருக்கும் உரித்தாகும் ஒரு சட்ட உரிமையாகும்.
    2. ஓர் அரசியல் ஜனசமூகத்தில் வாழும் பிரஜைகளுக்கு குறிப்பிட்ட தேசியத்துவத்தினை வழங்கும் ஒரு சட்ட விதிமுறையாகும்.
    3. பிறப்பினால் அல்லது பதிவினால் பெற்றுக்கொள்ளப்படும் ஒரு சட்ட அந்தஸ்தாகும்.
    4. ஓர் அரசியல் சமூகத்தில் அதனை அனுபவிப்போருக்கு சமமானதும் முழுமையானதுமான உறுப்புரிமையை உத்தரவாதப்படுத்தும் ஒரு சட்ட அந்தஸ்தாகும்.
    5. அரசுக்கும் பிரஜைகளுக்கும் இடையிலான தொடர்பினை வெளிப்படுத்தும் ஒரு சட்ட நிலையாகும். ( )

Agaram.LK - Keep your dreams alive!
Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

17. அரசியல், பொருளாதார கருத்தியல்களின் படி அரசாங்கங்களை வகைப்படுத்தும் முறைகளாவன
    1. தாராள ஜனநாயக அரசாங்கங்கள்
    2. சில்லோராட்சி அரசாங்கங்கள்
    3. நவதாராள வாத அரசாங்கங்கள்
    4. சோசலிச அரசாங்கங்கள்
    5. சமூக ஜனநாயக அரசாங்கங்கள் ( )

18. அனைத்தாண்மை அரசாங்கத்தின் பிரதான பண்புகளாவன
    1. தனிமுதன்மை அதிகாரம் ஒரு தனி நபரிடம் குவிந்திருத்தல்
    2. ஆட்சியாளன் சட்டத்துக்கு மேலானவனாகவும் யாப்புறு வரையறைகளுக்கு அப்பாற்பட்டவனாகவும் இருத்தல்
    3. ஒரு தனிக் கட்சியின் ஆதிக்கத்துடன் கூடிய போட்டிக் கட்சிமுறை
    4. தன்னிச்சையாகவும் தடைகளின்றியும் அரச அதிகாரத்தைப் பிரயோகித்தல்
    5. சமூக மற்றும் தனி மனித இருப்பின் சகல பகுதிகளிலும் பரவிய அரசியல் கட்டுப்பாடு நிலவுதல் ( )

19. பிரசை என்பவர்
    1. அரசின் ஒப்புதலோடு ஓர் அரசியல் சமூகத்தின் உறுப்பினர் என வரைவிலக்கணப் படுத்துகிறார்.
    2. அரசினால் வழங்கப்படும் விசேட உரிமைகளையும் கடப்பாடுகளையும் கொண்டவராவார்.
    3. வெளிநாட்டவர்களுடன் ஒத்தவராகின்றார்.
    4. பிறப்பினால் அல்லது பதவினால் கிடைக்கப் பெறுகிறது.
    5. வாக்குரிமையையும் சில அரசப் பதவிகளையும் வழங்குவதற்கான ஓர் அளவுகோலாகும். ( )

20. பெண்ணியல்வாத இயக்கத்திலும் சிந்தனையிலும் பிரதான துறைகளாவன
    1. தாராண்மை பெண்ணியல் வாதம்
    2. தேசிய பெண்ணியல் வாதம்
    3. சமவுடமை பெண்ணியல் வாதம்
    4. தீவிர பெண்ணியல் வாதம்
    5. பின்நவீன பெண்ணியல் வாதம் ( )

❖ 21 – 25 வரையிலான வினாக்கள் ஒவ்வொன்றும் இரு கூற்றுக்களைக் கொண்டுள்ளன. கீழே தரப்பட்டுள்ள அட்டவணையில் வழங்கப்பட்டுள்ள (1), (2), (3), (4) மற்றும் (5) ஆகிய விடைகளில் இருந்து தரப்பட்டுள்ள இரு கூற்றுக்களுக்கும் மிகச்சரியாக பொருந்தும் விடை இலக்கத்தினை தெரிவு செய்து அடைப்புக்குறிக்குள் எழுதுக.

| இலக்கம் | முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று |
|---|---|---|
| 1) | உண்மை | உண்மை |
| 2) | உண்மை | பொய் |
| 3) | பொய் | உண்மை |
| 4) | பொய் | பொய் |
| 5) | உண்மை | உண்மையாக இருப்பதுடன் முதல் கூற்றை மேலும் விபரிக்கின்றது. |

| | முதலாவது கூற்று | இரண்டாவது கூற்று |
|---|---|---|
| 21 | அரசியல் ஆய்வில் முதலில் பயன்படுத்தப்பட்டதும் நீண்டகால நிலைப்பிணைக் கொண்டதுமான அணுகுமுறை தத்துவார்த்த அணுகு முறையாகும் | பிளேட்டோ அரிஸ்டோட்டில் இவ்வணுகுமுறையின் முன்னோடிகளாவர் ( ) |
| 22 | அரசறிவியல் கோட்பாடு என்பதற்கு இரு விளக்கங்கள் உள்ளன. | இலட்சி கோட்பாடு மட்டுமே அரசறிவியல் கலந்துரையாடப்படுகின்றது. ( ) |
| 23 | கலப்பு முறை அரசியலமைப்பு என்பது பெரும்பாலும் அர்த்த ஜனாதிபதி முறை என்றே அழைக்கப்படுகின்றது. | பாராளுமன்ற மற்றும் ஜனாதிபதி அரசாங்க முறையின் பண்புகளை உள்ளடக்கிய அரசியலமைப்பு அர்த்த ஜனாதிபதி அரசியலமைப்பு ஆகும். ( ) |
| 24 | அரசுக்கு வெளியாகவும் ஆரசின் எல்லைகளை கடந்த சாதனங்கள் மற்றும் இயக்கங்களின் ஆதிபத்தியம் உலகமயமாக்கல் என அடையாளப்படுத்தலாம். | உலகமயமாக்கலின் விளைவாக தேசிய அரசு இறைமை மிக்க அரசுகளாக மாற்றம் அடைந்துள்ளன. ( ) |
| 25 | நவதாராண்மைவாத அரசு பொருளாதார பின்புலம் சமூகப் பின்புலம் என்ற அடிப்படையில் தேற்றம் பெறுகிறது. | நவதாராண்மை வாத ஆசிய நலன்புரிவாதம் படிப்படியாக பின்னிலை அடைந்து முகாமைத்துவ அரசு எண்ணக்கரு பரவியது. ( ) |

(25 x 2 = 50 புள்ளிகள்)



Agaram.LK - Keep your dreams alive!
agaram.lk

Agaram.LK - Keep your dreams alive!

## குறுவினா

1) கிரேக்ககாலத்தின் நகரஅரசோடு தொடர்புபடுத்தி அரசியல் தொடர்பாக முன்வைக்கப்பட்ட இரண்டு கருக்களையும் தருக?

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

2) சமூகவியல் அணுகுமுறையின் முன்னோடிகள் இருவரின் பெயர்களைதருக?

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

3) அரசியல் கட்சிகளின் வளர்ச்சிக்கு பின்புலமாக அமைந்த இரண்டு பிரதான காரணிகளை தருக?

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

4) அரசு சமூக நிறுவனங்களில் மேலான நிறுவனம் என்பதில் இரு விளக்கங்களை முன்வைத்த சிந்தனையாளர்களின் பெயர்களை தருக?

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

5) I) "அரசு சர்வ வல்லமை பொருந்தியதாகும்"

II) "அரசு வர்க்க நலன் பேணும் கருவியாகும்"

மேற்கூறப்பட்ட கூற்றுகளினை அடிப்படையாக கொண்ட அரசின் விளக்கங்களை பெயரிடுக?

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

6) அரசு சமூகத்தில் ஏற்பட்ட உடன்பாட்டின் விளைவு எனக் குறிப்பிட்ட இரண்டு சிந்தனையாளர்களை குறிப்பிடுக?

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

7) இந்திய அரசியலமைப்பில் அவசரகால நிலை மூன்று வகையாக குறிப்பிடப்படுகிறது. அவற்றில் இரண்டினை தருக?

……………………………………………………………………………………………………

……………………………………………………………………………………………………

Agaram.LK - Keep your dreams alive!

Agaram.LK - Keep your dreams alive!

8) தேசியவாதம் பிரதானமாக இரண்டு தன்மைகளை கொண்டுள்ளது. அவற்றினை தருக?

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

9) அமெரிக்க சமூக உளவியலாளரான மோர்ரிடின் டோயிஷ் முரண்பாட்டினை இரண்டாக வகைப்படுத்தியுள்ளார். அவற்றினை தருக?

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

10) இறைமையின் இரண்டு வகைகளையும் தருக?

…………………………………………………………………………………………………

…………………………………………………………………………………………………

(10 x 1 = 10 புள்ளிகள்)

## பகுதி II

❖ **விரும்பிய இரண்டு வினாக்களுக்கு விடையளிக்குக.**

1) அரசியல், அரசியல் விஞ்ஞானம் என்பவற்றுக்கிடையிலான தொடர்பு மற்றும் வேறுபாடுகளை விபரிக்குக.

(20 புள்ளிகள்)

2) பின்வருவனவற்றில் இரண்டினை ஆராய்க?

i) அரசியல் கட்சிகளின் வகிபங்கு

ii) அழுக்க குழுக்கள்

iii) சிவில் சமூகம்

(20 புள்ளிகள்)

3) பின்வருவனவற்றில் இரண்டினை விபரிக்குக?

i) பாசிசவாத அரசு

ii) காலணித்துவ அரசு

iii) கேத்திர அரசு

(20 புள்ளிகள்)

4) பின்வரும் கருத்தியல்களில் இரண்டினை விமர்சன ரீதியாக ஆராய்க.

i) மதசார்பின்மை வாதம்

ii) தேசியவாதம்

iii) குடியரசு வாதம்

(20 புள்ளிகள்)

Agaram.LK - Keep your dreams alive!